# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

100/100

# சமூக அறிவியல்

## பாடத்தில் சதமடிக்க என்ன செய்யவேண்டும்?



- உயர்ந்த எண்ணங்களும் உயரிய குறிக்கோள்களும் வெற்றியின் முதல் படி
- சமூக அறிவியல் பாடத்தில் *100* மதிப்பெண்கள் எடுக்க முடியாது என்று பலரும் நினைக்கிறார்கள். அதேநேரம், அலட்சியத்தால் பலரும் தேர்ச்சி பெறத்தவறுவதும் சமூக அறிவியலில் தான்.
- சமூக அறிவியல் வினாத்தாள் அமைப்பை (Question Pattern) முதலில் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

### வினாத்தாள் வடிவமைப்பு / Question Pattern

| Qns & Marks | வினா வரிசை எண் Question Serial number | வினா வகைகள் Question Type | மதிப்பெண்கள் Marks |
|---|---|---|---|
| Part – I (1 marks) Q.No: 1 -14 | Qn. No: 1 - 14 | சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (Choose the correct answer) | 14 |
| Part – II (2 marks) Q.No: 15-28 | Qn. No: 15 - 28 *(QN. No:28 is Compulsory)* | சிறுவினாக்கள் (Short Questions) | 20 |
| Part – III (5 marks) Q.No.: 29 - 42 | Qn. No: 29 | கோடிட்ட இடங்கள் (Fill in the blanks) | 50 |
| | Qn. No: 30 & 31 | வரலாறு - பொருத்துக<br>புவியியல்- பொருத்துக (Match the following) | |
| | Qn. No: 32 | அ.வேறுபாடுகள் (Distinguish) - 2<br>ஆ.காரணம் கூறுக(Give reason) - 1 | |
| | Qn. No: 33 - 40 | **விரிவான விடையளி / Detail questions**<br>வரலாறு மற்றும் புவியியல் - 2 வினாக்கள்<br>குடிமையியல் மற்றும் பொருளியல் - 2 வினாக்கள் | |
| | Qn. No: 41 | வரலாறு – காலக்கோடு (Time line) | |
| | Qn. No: 42 *(QN. No:42 is Compulsory)* | **வரைபட வினா / Map questions**<br>உலகம் வரைபடம் (அல்லது)<br>இந்தியா வரைபடம் - வரலாறு | |
| Part – IV (8 marks) Q.No.: 43,44 | Qn. No: 43 | **வரலாறு – தலைப்பு வினாக்கள் (History – Caption questions)**<br>43-ல் அ, ஆ (அல்லது) இ, ஈ | 8 |
| | Qn. No: 44 | **வரைபட வினா / Map questions**<br>அ) புவியியல் - இந்தியா வரைபடம் (அல்லது)<br>ஆ) புவியியல் - தமிழ்நாடு வரைபடம் | 8 |
| | | **மொத்த மதிப்பெண்கள்** | **100** |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

சென்ற வருடம் போல் இல்லாமல் மாணவர்கள் நலன் கருதி தேர்விற்கு மூன்று மணி நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தேர்விற்கான மூன்று மணி நேரத்தை மாணவர்கள் எவ்வாறு ஒவ்வொரு வினாக்களுக்கும் நேரம் ஒதுக்கி எழுத வேண்டும் என்பதை பார்க்கலாம்.

**TIME MANAGEMENT / நேர மேலாண்மை**

| No / எண் | Questions type / வினா வகை | Questions / வினாக்கள் | Marks / மதிப்பெண் | Minutes / நிமிடங்கள் | Time / நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 - 14 | சரியான விடை (Choose the correct answer) | 14 | 14 | 20 | 10:15 – 10:35 |
| 15 - 28 | குறுகிய விடையளி (Short answers) | 10 out of 14 (28-compulsory question) | 20 | 40 | 10:35 – 11:15 |
| 29 - 42 | விரிவான விடையளி (Detail questions) | 10 out of 14 (42-compulsory question) | 50 | 70 | 11:15 – 12:25 |
| 43 | தலைப்பு வினாக்கள் (Caption questions) | அ) 1 out of 2 ***அல்லது*** ஆ) 1 out of 2 | 08 | 15 | 12:25 – 12:40 |
| 44 | வரைபடம் (Maps) | அ) இந்திய வரைபடத்தில் 8 இடங்கள் ***அல்லது*** ஆ) தமிழக வரைபடத்தில் 8 இடங்கள் | 08 | 20 | 12:40 – 1:00 |
| திருப்புதல், முக்கியமான வார்த்தைகளை அடிக்கோடிடுதல் மற்றும் சரிபார்த்தல் (Revision, verify and underline the important words) | | | | 15 | 1:00 – 1:15 |

*தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் உள்ள வினாத்தாளை எவ்வழியில் பிரித்துப் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம் என்பதை ஒவ்வொரு படிநிலையாக காணலாம்!*

**பகுதி – I (1 mark questions / ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

- ♣ இப்பகுதியில் மொத்தம் 14 வினாக்கள் கொடுக்கப்படுகின்றன.
- ♣ முதலில் உள்ள 1-5 கேள்விகள் வரலாறு (History) பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- ♣ அடுத்த 6-10 கேள்விகள் புவியியல் (Geography)பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- ♣ 11 மற்றும் 12ஆம் எண் கேள்விகள் (2 வினாக்கள்) குடிமையியல் (Civics) பகுதியில் இருந்து கேட்கப்படுகிறது.
- ♣ 13 மற்றும் 14ஆம் எண் கேள்விகள் (2 வினாக்கள்) பொருளியல் (Economics) பகுதியில் இருந்து கேட்கப்படுகிறது.

❖ **Method of study / படிக்கும் முறை**

- ♣ ஒவ்வொரு பாடம் முடிந்ததும் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி வினாக்களை (Book back questions) முழுமையாக படித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கு இடையிலும் நீல வண்ணத்தில் (blue colour) கொடுக்கப்பட்டுள்ள பெட்டி செய்திகளை (Do you know?) கூர்ந்து படித்துக்கொள்ள வேண்டும். இவற்றுள் சரியான விடை மற்றும் கூற்று, காரணம் சரி வினாக்களும் வருகின்றன.
- ♣ மேலும் QR code பகுதி வினாக்களையும் கூடுதலாக படித்துக்கொள்ள வேண்டும். இவ்வினாக்கள் புத்தக உள் வினாக்களாக (inside questions) வரவும் வாய்ப்பிருக்கிறது.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – II (2 mark questions / இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

- இப்பகுதியில் மொத்தம் 14 வினாக்கள் கொடுக்கப்படுகின்றன.
- வினா எண் 15 முதல் 18 வரை உள்ள 4 கேள்விகள் வரலாறு பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- வினா எண் 19 முதல் 22 வரை உள்ள 4 கேள்விகள் புவியியல் பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- வினா எண் 23 மற்றும் 24-இல் 2 கேள்விகள் குடிமையியல் பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- வினா எண் 25 முதல் 28 வரை உள்ள 4 கேள்விகள் பொருளியல் பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது. இவற்றில் 28வது வினா கட்டாய வினா (compulsory question) எனவே கண்டிப்பாக இவ்வினாவிற்கு பதிலளிக்க வேண்டும்.

### Method of study /படிக்கும் முறை

- ஒவ்வொரு பாடம் முடிந்ததும் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி வினாக்களை முழுமையாக படித்துக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் மனப்பாடம் (Rote memory) செய்வதை தவிர்த்து தெளிவாக புரிந்து படிக்க முயற்சி செய்யவும்.

## பகுதி – III (5 mark questions / ஐந்து மதிப்பெண் வினாக்கள்)

- இப்பகுதியில் மொத்தம் 14 வினாக்கள் கொடுக்கப்படுகின்றன.
- வினா எண் 29 கோடிட்ட இடங்களை நிரப்புக (Fill in the blanks) என்ற வடிவில் கேட்கப்படுகிறது. இவை பெரும்பாலும் புத்தக பின் வினாக்களாகவே (Book back questions) வரலாம். ஆதலால் புத்தகத்தின் பின் கோடிட்ட இடங்களை தரவாக பார்த்தாலே போதுமானது.
- வினா எண் 30 மற்றும் 31 வினாக்கள் பொருத்துக (Match) வடிவில் கேட்கப்படுகிறது. இவை வரலாறு மற்றும் புவியியல் பகுதியில் இருந்து கேட்கப்படுகிறது.
- வினா எண் 32 வேறுபடுத்துக (Distinguish) மற்றும் காரணம் கூறுக (Give reason) என்ற வடிவில் 3 கேள்விகள் புவியியல் பகுதியிலிருந்து கேட்கப்படுகிறது.
- வினா எண் 33 மற்றும் 34-இல் 2 கேள்விகள் வரலாறு பகுதியிலிருந்து விரிவாக விடையளிக்குமாறு (Detail questions) கேட்கப்படுகிறது.
- வினா எண் 35 மற்றும் 36-இல் 2 கேள்விகள் புவியியல் பகுதியிலிருந்து விரிவாக விடையளிக்குமாறு கேட்கப்படுகிறது.
- வினா எண் 37 மற்றும் 38-இல் 2 கேள்விகள் குடிமையியல் பகுதியிலிருந்து விரிவாக விடையளிக்குமாறு கேட்கப்படுகிறது.
- வினா எண் 39 மற்றும் 40-இல் 2 கேள்விகள் பொருளியல் பகுதியிலிருந்து விரிவாக விடையளிக்குமாறு கேட்கப்படுகிறது.
- **Time line / காலக்கோடு:** 41வது வினா வரலாற்றில் நடந்த 5 முக்கிய நிகழ்வுகள் (important events) நடந்த வருடங்கள் காலக்கோட்டில் குறிக்குமாறு வினா வரலாற்று பகுதியிலிருந்து கேட்கப்படுகின்றன. இங்கு 1800 முதல் 1950 வரையிலான வரலாற்று நிகழ்வுகள் உலகம் - இந்தியா என்ற வகையில் தரவாக திருப்புதல் (revision) செய்ய வேண்டும். நம் புத்தகத்தில் முக்கிய வரலாற்று நிகழ்வுகள் ஆண்டு வாரியாக (year wise) பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. 1885 – 1919 | 2. 1900 – 1920 | 3. 1920 – 1940 | 4. 1930 – 1950 |
| 5. 1910 – 1930 | 6. 1920 – 1950 | 7. 1935 – 1950 | |

- காலக்கோடு வினாப்பகுதியில் பெரும்பாலும் மேற்கண்ட ஆண்டுகளே (above years) பெரும்பாலும் வினாக்களில் கேட்க வாய்ப்பிருக்கிறது. எனவே இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து படிக்க வேண்டும்.
- **World map / உலக வரைபடம்:** 42ஆவது வினா உலக வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடங்களை குறிக்குமாறு கேட்கப்பட்டிருக்கும். இப்பகுதியில் உலகம் மட்டுமின்றி இந்தியா வரவும் வாய்ப்பு இருக்கிறது. உலகம் வரைபடம் என்று பார்க்கும் போது முதல் இரண்டு உலகப்போர் நிகழ்வுகளை (First two world wars) முக்கியமாக படித்துக்கொள்ள வேண்டும். இந்தியா என பார்க்கும் போது 1857 புரட்சி முதல் 1950 இந்திய குடியரசு தினம் வரை (From 1857 Great Rebillion to 1950 Indian Republic day) உள்ள நிகழ்வுகளில் (events) தரவாக இருக்க வேண்டும். 42ஆவது வினாவிற்கு கட்டாயமாக (compulsory question) விடையளிக்க வேண்டும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – IV (8 mark questions / எட்டு மதிப்பெண் வினாக்கள்)

- இப்பகுதியில் மொத்தம் 4 வினாக்கள் 'அல்லது' வகையில் கொடுக்கப்படுகிறது.
- 43வது வினா தலைப்பு வினாக்கள் (caption questions) என்ற வகையில் 8 மதிப்பெண்கள் இங்கு 43-ல்.... அ வினா மற்றும் ஆ வினா - முதல் 5 பாடங்களில் இருந்தும், **(அல்லது)** இ வினா மற்றும் ஈ வினா – அடுத்த 5 பாடங்களில் இருந்தும் கேட்கப்படுகிறது.
- 44வது வினா புவியியல் வரைபடம் (Geography map) என்ற வகையில் 8 மதிப்பெண்கள்

  **அ) India map / இந்திய வரைபடம்:** இவ்வினாவில் இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புகளான (Physical divisions) மலைத்தொடர்கள் (mountain ranges), பீடபூமிகள் (plateaus), சமவெளிகள் (plains), தீவுகள் (islands), பாலைவனங்கள் (deserts), ஆறுகள் (rivers), வனவிலங்கு / பறவைகள் சரணாலயங்கள் (Animals & birds' sanctuaries) பற்றியும், பருவக்காற்றுகள் (monsoons), உயிர்க்கோளபெட்டகங்கள் (Biosphere reserves), மண்வகைகள் (soil types) காணப்படும் பகுதி, காடுகளின் வகைகள் (forest types), மென்பொருள் தொழிலகங்கள் (software industries), சர்வதேச விமான நிலையங்கள் (International airports), அணுமின்நிலையங்கள் (atomic powerstations) மற்றும் ரயில் பாதைகள் (rail routes) போன்றவற்றை பற்றியும் கேட்கப்பட வாய்ப்பு இருக்கிறது. **(அல்லது)**

  **ஆ) Tamil Nadu map / தமிழக வரைபடம்:** இவ்வினாவில் தமிழகத்தின் முக்கிய இடங்கள் மற்றும் இயற்கை அமைப்புகளான (Physical divisions) மலைத்தொடர்கள், குன்றுகள் (peaks), பீடபூமிகள்(Plateaus), சமவெளிகள்(Plains), அணைக்கட்டுகள் (dams), துறைமுகங்கள் (harbours), ஆறுகள், ஏரிகள் (lakes) பற்றியும், சர்வதேச / உள்நாட்டு விமான நிலையங்கள் (domestic airports), போன்றவற்றை பற்றியும் கேட்கப்பட வாய்ப்பு இருக்கிறது.
- இப்பகுதியில் கொடுக்கப்படும் போக்குவரத்து தொடர்பான வினாக்களைத் (transport related questions) தவிர்ப்பது நல்லது. ஏனெனில், உதாரணமாக சென்னை-கொல்கத்தா ரயில் பாதை (Chennai –Kolkata rail route) வினாவில் சென்னை, கொல்கத்தா, ரயில் பாதை ஆகிய மூன்றையும் சரியாகக் குறித்தால்தான் ஒரு மதிப்பெண் பெற முடியும். ஏதேனும் ஒரு இடம் தவறானால்கூட மதிப்பெண்ணை இழக்க நேரிடும். எளிமையான பகுதிகளை மட்டும் பென்சிலில் குறித்தும், அம்பு குறியிட்டும் (put arrows), நிழலிட்டும் (make shade), பேனாவில் எழுதவும்.

## ஒரு மதிப்பெண் வினாக்களை பிரித்து படிக்கும் முறை

- 10ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் ஒரு மதிப்பெண் வினாக்களுக்கு (1 mark questions) மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து படிக்க வேண்டும். ஏனெனில் சமூக அறிவியல் பொதுத்தேர்வை பொறுத்தவரை 56 மதிப்பெண்கள் ஒரு மதிப்பெண் வினாக்களே வருகின்றன.
- நீங்கள் தேர்வில் 50 மதிப்பெண்களுக்கு மேல் பெறுவதற்கு, ஒரு மதிப்பெண் வினாக்களுக்கு முதலில் முக்கியத்துவம் (give importance for 1 mark questions)கொடுக்க வேண்டும்.
- முதல் படியாக வினாத்தாள் வடிவமைப்புக்கு ஏற்றவாறு கீழ்க்கண்டவாறு பிரித்து படிக்க வேண்டும்.

| S. No / வினா வரிசை எண் | Question type / வினா வகைகள் | Marks / மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 – 14 வரை | சரியான விடையைத் தேர்ந்தெடு<br>Choose the suitable answer | 14 |
| 29 | கோடிட்ட இடங்களை நிரப்புக<br>Fill in the blanks | 5 |
| 30 மற்றும் 31 | பொருத்துக வினா<br>Match the following | 10 |
| 32 (ஆ) | காரணம் கூறுக (Give reason) | 1 |
| 41 | காலக்கோடு Time line | 5 |
| 42 | வரலாறு வரைபடம்<br>History map | 5 |
| 43 | தலைப்பு வினாக்கள்<br>Caption questions | 8 |
| 44 | புவியியல் வரைபடம்<br>Geography map | 8 |
| **Total marks / மொத்த மதிப்பெண்கள்** | | **56** |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# சமூக அறிவியல் தேர்விற்கான பொதுக்குறிப்புகள் (General Tips for Social Science Examination)

## ➔ பொதுத்தேர்வுக்கு படிக்க வேண்டிய முறைகள் (Methods for studying Public exam)

- ♣ ஒரு மதிப்பெண் வினாக்களுக்கான (1 mark questions) விடைகள் முழுவதையும் முதல் இரண்டு பக்கத்திலேயே எழுதி விடுங்கள்.
- ♣ இரண்டு மதிப்பெண் வினாக்களுக்கு (2 mark questions) குறைந்தது 2 முதல் 4 வரை குறிப்புகள் கொடுங்கள்.
- ♣ இரண்டு மதிப்பெண் வினாக்களில் சரியாக 10 வினாக்களுக்கு மட்டும் விடையளியுங்கள்.
- ♣ 28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் உங்களுக்கு தெரியும் என்பதற்காக கூடுதலாக எழுதாதீர்கள்.
- ♣ ஐந்து மதிப்பெண் வினாக்களுக்கு (5 mark questions)குறைந்தது 5 உட்தலைப்புகளில் பதில் அளியுங்கள்.
- ♣ தலைப்பு வினாக்கள் (Caption questions) 8 மதிப்பெண் வினாக்களில் (8 mark questions)கேட்கப்படுவதால் நன்றாக திருப்புதல் செய்து படிக்கவேண்டும்.
- ♣ கொஞ்சம் திட்டமிட்டு தயாரித்தால் நிச்சயம் சமூக அறிவியல் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்றுவிடுவீர்கள்.

## ➔ தேர்வு எழுத வேண்டிய முறைகள் (Presentation):

- ♣ பகுதி எண் (Part Number), வினா எண் கட்டாயம் எழுத வேண்டும்
- ♣ 1.5 செ.மீ இடைவெளி விட்டு வரி அமைக்க வேண்டும். ஒரு பக்கத்திற்கு 12 லிருந்து 15 வரி எழுதலாம்.
- ♣ விடைகளைப் பக்கம் பக்கமாக எழுதுவது மதிப்பெண் தராது. தெளிவான விடைதான் மதிப்பெண்ணைத் தரும்.
- ♣ கேள்வி பகுதிகள் கேள்வி தலைப்புகளுக்கு அடிக்கோடிட (underline the Topic) வேண்டும்
- ♣ சரியான விடை பகுதியில் (Choose part)ஏதேனும் ஒரு விடை பகுதியை மட்டும் எழுதவும்.
- ♣ பொருத்துக பகுதியில் (Match Part)வினாவும் விடையையும் நேராக எழுதவும்.
- ♣ இரண்டு மதிப்பெண்கள் வினாவுக்குக் கண்டிப்பாக இரண்டு குறிப்புகளை எழுதவும்.
- ♣ வேறுபாடு பகுதியில் இரண்டு அல்லது மூன்று குறிப்புகளை வேறுபடுத்திக் காட்டி அட்டவணையாக எழுத வேண்டும். எடுத்துகாட்டுகளுடன் (Examples) எழுதுவது நல்லது.
- ♣ தலைப்பு வினா பகுதியில் தலைப்பு எழுதி விடை மட்டும் எழுதவும்.
- ♣ 5 மதிப்பெண் பகுதியில் குறைந்தது 5 துணைதலைப்புகளில் (5 sub headings) பத்தியிடவும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## ➔ பொதுத்தேர்வில் வினாத்தாள் வாசிக்கும் போது எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

- ♣ வினாத்தாள் வாங்கியவுடன் பொறுமையாக முதல் கேள்வியிலிருந்து கடைசி கேள்வி வரை வாசிக்க வேண்டும்.
- ♣ வினாத்தாளை படித்தவுடன் கேள்விகளுக்கான விடை எழுதும் நேர மேலாண்மைக்கு (Time management) முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- ♣ படிக்காத கேள்விகள் கேட்கப்பட்டிருந்தால் அதைப்பற்றி யோசித்து நேரத்தை வீணடிக்காமல் படித்த கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நல்லது.
- ♣ வினாத்தாள் வாசிக்கும் போது ஒரு மதிப்பெண் மற்றும் வரைபடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- ♣ சற்று கவனக்குறைவு ஏற்பட்டாலும் 100 மதிப்பெண் வாய்ப்பை இழக்க நேரிடும்.

## ➔ எழுதும் போது எந்த வரிசையில் எழுத வேண்டும்?

- ♣ முதலில் 56 மதிப்பெண்கள் பெறக்கூடிய 1 மதிப்பெண் வினாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத வேண்டும்.
- ♣ இறுதிக்கட்டத்தில் பதற்றத்தில் தவறு இழைக்க நேரிடும். குறிப்பாக வரைபடத்தை ஆரம்பத்திலேயே குறித்துவிட்டால் சிறப்பு.

## ➔ எத்தகைய கேள்விகளை தெரிவு செய்ய வேண்டும்?

- ♣ நன்கு எழுதிபார்த்து வகுப்பறைத்தேர்வுகளில் (Class tests) முழுமதிப்பெண்கள் பெற்ற கேள்விகள் கேட்கப்பட்டிருந்தால் அத்தகைய கேள்விகளை தெரிவு செய்வது நன்று. படித்து எழுதிபார்க்காத கேள்விகளை தவிர்ப்பது நல்லது.

**பாடங்களை எளிதாக புரிந்து கொள்ள கீழ்க்கண்ட அட்டவணைகளை படித்து பயன்பெறலாம்.**

புத்தகம் முழுமையிலும் வரலாற்று பகுதியில் உள்ள முக்கிய ஆண்டுகள் மற்றும் அவ்வாண்டில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு நீங்கள் எளிதாக திருப்புதல் செய்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளது.

**1806 முதல் 1860 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்**

| | |
|---|---|
| 1806 | - The Vellore Revolt / வேலூர் புரட்சி |
| 1818 | - Farazi movement / ஃபராசி இயக்கம் |
| 1828 | - Brahmo Samaj establishment / பிரம்ம சமாஜம் தோற்றம் |
| 1831 | - Kol Revolt / பழங்குடியினர் கோல் கிளர்ச்சி |
| 1850 | - Taiping Rebellion / தைபிங் கலகம் |
| 1852 | - First school for untouchables / ஒடுக்கப்பட்டோருக்கு முதல் பள்ளி |
| 1852 | - Madras Native Association / சென்னைவாசிகள் சங்கம் |
| 1855 | - Santhal brothers Revolt / சாந்தலர் சகோதரர்கள் கிளர்ச்சி |
| 1856 | - Widows' Remarriage Reform Act / விதவைகள் மறுமண சீர்திருத்தச் சட்டம் |
| 1857 | - Aligarh movement / அலிகார் இயக்கம் |
| 1857 | - The Great Rebellion / பெருங்கலகம் |
| 1859 | - The Indigo Revolt / இண்டிகோ கிளர்ச்சி |
| 1860 | - The first age of consent Act / முதல் திருமண வயதுச் சட்டம் |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## 1905 முதல் 1920 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

1905 - Partition of Bengal, Swadeshi Movement / வங்கப்பிரிவினை, சுதேசி இயக்கம்

1907 - The Sadhu Jana Paripalana Sangam / சாது ஜன பரிபாலன சங்கம்

1912 - Sangitha Vidya Mahajana Sangam, Balkan League / பால்கன் கழகம், சங்கீத வித்யா மகாஜன சங்கம்

1914 - First World War started / முதல் உலகப்போர் துவக்கம்

1916 - Battle of Verdun, Lucknow Pact, The Home Rule Movement / வெர்டன் போர், லக்னோ ஒப்பந்தம், தன்னாட்சி இயக்கம்

1918 - The First World war ended, The Kheda Satyagraha, Jallianwala Bagh Massacre, Peace Conference in Paris, The Treaty of Versailles / முதல் உலகப்போர் முடிவு, கேதா சத்தியாகிரகம், ஜாலியன்வாலாபாக் படுகொலை, பாரிஸ் அமைதி மாநாடு, வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920 - Khilafat Movement, Non-Cooperation Movement, Establishment of League of Nation / பன்னாட்டுச் சங்கம் அமைக்கப்படுதல், கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம்

## 1922 முதல் 1942 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

1922 - The Chauri Chaura incident / சௌரி சௌரா இயக்கம்

1923 - The Swaraj Party / சுயராஜ்ஜியக் கட்சி தொடக்கம்

1925 - The Self-Respect Movement சுயமரியாதை இயக்கம் தொடக்கம்

1927 - The Simon Commission / சைமன் குழு அமைத்தல்

1930 - Salt Satyagraha Movement, Dandi March, The First Round Table Conference
தண்டி யாத்திரை, உப்பு சத்தியாகிரகம், முதல் வட்ட மேசை மாநாடு

1931 - The Gandhi–Irwin Pact, The Second Round Table Conference
காந்தி-இர்வின் ஒப்பந்தம், இரண்டாவது வட்ட மேசை மாநாடு

1932 - Poona Pact, Economic summit in Ottawa, The Communal Award, The Third Round Table Conference
பூனா ஒப்பந்தம், ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாடு, வகுப்புவாரி ஒதுக்கீடு, மூன்றாவது வட்ட மேசை மாநாடு

1935 - The Government of India Act / இந்திய அரசியலமைப்புச் சட்டம்

1938 - The Munich Pact / மியூனிச் உடன்படிக்கை

1939 - The Second world war started / இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940 - Battle of Britain / பிரிட்டன் போர்

1941 - Pearl Harbour attack / முத்துத் துறைமுகம் தாக்கப்படுதல்

1942 - Battle of Stalingrad, Battle of El Alamein / எல் அலாமெய்ன் போர், ஸ்டாலின்கிரேடு போர்

1942 - The Beveridge Report in Britain, Quit India Movement
வெள்ளையனே வெளியேறு இயக்கம், பிரிட்டனின் பெவரிட்ஜ் அறிக்கை

## 1943 முதல் 1992 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

1943 - First Tamil Isai Conference / முதல் தமிழ் இசை மாநாடு

1944 - Dravidar Kazhagam / திராவிடர் கழகம்

1945 - The Second World war ended, Bretton Woods Conference, The Manila Pact
இரண்டாம் உலகப்போர் முடிவு, பிரெட்டன் உட்ஸ் மாநாடு, மணிலா ஒப்பந்தம்

1947 - India became Independent / The Madras Devadasis / இந்தியா சுதந்திரமடைதல், மதராஸ் தேவதாசி சட்டம்

1954 - The Geneva Conference / ஜெனீவா மாநாடு

1955 - The Warsaw Pact, Baghdad Pact / பாக்தாத் ஒப்பந்தம், வார்சா ஒப்பந்தம்

1961 - The Non-Alignment Movement / அணி சேரா இயக்கம்

1989 - The Hindu Succession Amendment Act, Demolition of Berlin wall
பெர்லின் சுவர் தகர்ப்பு, இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டம்

1992 - The Maastricht Treaty / மாஸ்டிரிக்ட் ஒப்பந்தம்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## HISTORY / வரலாறு

### 19ஆம் நூற்றாண்டின் முக்கிய சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்
### Social and Religious Reform Movements in the 19th Century

| Name of the Movement<br>இயக்கத்தின் பெயர் | Founder / தோற்றுவித்தவர் | Year<br>ஆண்டு | Place of origin<br>தோற்றுவிக்கப்பட்ட இடம் |
|---|---|---|---|
| 1. Brahmo Samaj<br>பிரம்ம சமாஜம் | Raja Rammohan Roy<br>ராஜா ராம் மோகன்ராய் | 1828 | Calcutta / கல்கத்தா |
| 2. Adi Brahmo Samaj<br>ஆதி பிரம்ம சமாஜம் | Debranath Tagore<br>தேவேந்திரநாத் தாகூர் | 1886 | Calcutta / கல்கத்தா |
| 3. Prarthana samaj<br>பிரார்த்தனை சமாஜம் | Atma Ram Pandurang<br>ஆத்மராம் பாண்டுரங் | 1867 | Mumbai / மும்பை |
| 4. Poona Sarvajanik Sabha<br>புனே சர்வஜனிக் சபா | M.G. Ranade<br>M.G.ரானடே | 1870 | Poona / புனே |
| 5. Arya Samaj<br>ஆரிய சமாஜம் | Swami Dayanand Saraswati<br>சுவாமி தயானந்த சரஸ்வதி | 1875 | Mumbai / மும்பை |
| 6. Ramakrishna mission<br>இராமகிருஷ்ண மிஷன் | Vivekanandha<br>விவேகானந்தர் | 1886 | Calcutta / கல்கத்தா |
| 7. Theosophical movement<br>பிரம்மஞான இயக்கம் | H.P. Blavatsky, H.S. Olcott<br>H.P.பிளாவட்ஸ்கி, H.S. ஆல்காட் | 1875 | America / அமெரிக்கா |
| 8. Satyashodak Samaj<br>சத்திய சோதக் சமாஜ் | Jyothiba Phule ஜோதிபாபூலே | 1852 | Poona / புனே |
| 9. Dharma Paripalana Yogam<br>தர்ம பரிபாலன யோகம் | Narayana Guru<br>நாராயண குரு | 1903 | Kerala / கேரளா |
| 10. Sadhu Jana Paripalana sangam<br>சாதுஜன பரிபாலன சங்கம் | Ayyankali<br>அய்யன் காளி | 1907 | Thiruvananthapuram / திருவனந்தபுரம் |
| 11. Aligarh movement<br>அலிகார் இயக்கம் | Sir Sayid Ahmed Khan<br>சர் சையத் அகமது கான் | 1875 | Uttar Pradesh / உத்திரப்பிரதேசம் |
| 12. Deoband movement<br>தியோபந்த் இயக்கம் | Muhammad Qasim Wanotavi, Rashid Ahmad Gangotri<br>முகமது குவாசிம் நானோதேவி, ரஷித் அகமத் கங்கோத்ரி | 1867 | Uttar Pradesh / உத்திரப்பிரதேசம் |
| 13. Rahnumai Mazdayasnan Sabha<br>ரஹ்னுமாய் மஜ்தயாஸ்னன் சபா | Furdunji Naoroji<br>பர்துன்ஜி நௌரோஜி | 1851 | Mumbai / மும்பை |
| 14. Nirankari movement<br>நிரங்கரி இயக்கம் | Baba Dayal Dass<br>பாபா தயாள்தாஸ் | 1840 | Punjab / பஞ்சாப் |
| 15. Namdhari movement<br>நாம்தாரி இயக்கம் | Baba Ramsingh<br>பாபா ராம்சிங் | 1857 | Punjab / பஞ்சாப் |
| 16. Samarasa Suddha Sanmarga Satya Sanga<br>சமரச சுத்த சன்மார்க்க சங்கம் | Vallalar<br>வள்ளலார் | 1856 | Vadaloor / வடலூர் |
| 17. Samathuva Samajam<br>சமத்துவ சமாஜம் | Vaikunda Swamikal<br>வைகுண்ட சுவாமிகள் | 1839 | Kerala / கேரளா |
| 18. Advaidananda Sabha<br>அத்வைதானந்தா சபா | Iyothee Thassar<br>அயோத்திதாசர் | 1876 | Nilgiris / நீலகிரி |
| 19. Dravida Mahajana Sabha<br>திராவிட மகாஜன சங்கம் | | 1891 | Nilgiris / நீலகிரி |
| 20. Sakya Buddist Society<br>சாக்கிய பௌத்த சங்கம் | | 1898 | Chennai / சென்னை |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## புவியியல்

### 1. இந்தியா மற்றும் தமிழ்நாடு-இல் அதிக அளவு பயிரிடப்படும் முக்கிய பயிர்கள்

| பயிர்கள் | இந்தியா | தமிழ்நாடு |
|---|---|---|
| **அ) உணவுப்பயிர்கள்** | | |
| 1. நெல் | மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், பீகார், சட்டீஸ்கர், ஒடிசா, அசாம், ஹரியானா | தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி |
| 2. கோதுமை | உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் | - |
| 3. சோளம் | மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்தியபிரதேசம் | கோயம்புத்தூர் பீடபூமி, கம்பம் பள்ளதாக்கு |
| 4. கம்பு | இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரா | இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர், சேலம் |
| 5. பார்லி | இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் | - |
| 6. கேழ்வரகு | இராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, ஒடிசா, மகாராஷ்டிரா | கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர், கடலூர் |
| 6. பருப்பு வகைகள் | மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஆந்திரா | கோயம்புத்தூர்(கொண்டைக்கடலை)<br>வேலூர், கன்னியாக்குமரி (துவரை)<br>திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி (பச்சைப்பயறு, உளுந்து)<br>தர்மபுரி, கிருஷ்ணகிரி (கொள்ளு) |
| **ஆ) வாணிபப் பயிர்கள்** | | |
| 1. கரும்பு | மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத் | திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு |
| 2. பருத்தி | குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா, பஞ்சாப் | மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், தர்மபுரி |
| 3. சணல் | மேற்கு வங்கம், பீகார், அசாம், மேகாலயா | - |
| 4. எண்ணெய் வித்துகள் | குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரா, | **நிலக்கடலை:** வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், புதுக்கோட்டை<br>**தென்னை:** கோவை, தஞ்சாவூர், கன்னியாகுமரி |
| **இ) தோட்டப்பயிர்கள்** | | |
| 1. தேயிலை | அஸ்ஸாம், தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் | நீலகிரி, கோயம்புத்தூர் |
| 2. காபி | கர்நாடகம் | மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள், நீலகிரி மலைகள், ஏற்காடு, திண்டுக்கல், மதுரை, தேனி |
| 3. இரப்பர் | கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, அந்தமான் நிக்கோபார் தீவுகள் | கன்னியாகுமரி |
| 4. நறுமணப்பயிர் | கேரளா | மதுரையை சுற்றியுள்ள மலைப்பகுதிகள் |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# GEOGRAPHY

## 1. MAJOR CROPS CULTIVATED IN INDIA AND TAMIL NADU

| Crop Types | India | Tamil Nadu |
|---|---|---|
| **I. Food Crops** | | |
| **1. Rice** | West Bengal, Uttar Pradesh, Punjab, Tamil Nadu, Andhra Pradesh, Bihar, Chhattisgarh, Odisha, Assam, and Haryana. | Thanjavur, Tiruvarur, Tiruvallur, Kancheepuram, Villupuram, Cuddalore, Tirunelveli |
| **2. Wheat** | Uttar Pradesh, Punjab, Haryana, Rajasthan, Madhya Pradesh, Gujarat | - |
| **3. Jowar** | Maharashtra, Karnataka, and Madhya Pradesh | Coimbatore plateau, Kambam valley |
| **4. Bajra** | Rajasthan, Uttar Pradesh, Haryana, Gujarat and Maharashtra. | Ramanathapuram, Tirunelveli, Karur, Perambalur and Salem |
| **5. Barley** | Rajasthan, Uttar Pradesh | - |
| **6. Ragi** | Rajasthan, Karnataka, Andhra Pradesh, Tamil Nadu, Odisha, Maharastra | Coimbatore, Dharmapuri, Vellore, Cuddalore |
| **7. Pulses** | Madhya Pradesh, Uttar Pradesh, Rajasthan, Maharashtra and Andhra Pradesh. | Coimbatore (Bengal Gram)<br>Vellore, Kanyakumari (red gram)<br>Tiruvarur, Nagapattinam and Thoothukudi (green and black gram)<br>Dharmapuri, Krishnagiri (Horse Gram) |
| **II. Cash Crops** | | |
| **1. Sugar Cane** | Maharashtra, Karnataka, Tamil Nadu and Gujarat. | Tiruvallur, Kancheepuram, Vellore, Cuddalore, Tiruchirapalli, Coimbatore, Erode and Tirunelveli |
| **2. Cotton** | Gujarat, Maharashtra, Andhra Pradesh, Punjab. | Madurai, Ramanathapuram, Virudhunagar, Tirunelveli, Thoothukudi, Salem, Dharmapuri |
| **3. Jute** | West Bengal, Bihar, Assam and Meghalaya | - |
| **4. Oil seeds** | Gujarat, Rajasthan, Madhya Pradesh, Maharashtra and Andhra Pradesh | **Groundnut:** Vellore, Tiruvannamalai, Villupuram, Salem and Pudukottai<br>**Coconut:** Coimbatore, Thanjavur and Kanyakumari |
| **III. Plantation Crops** | | |
| **1. Tea** | Assam, Tamil Nadu, Kerala and West Bengal | Nilgiris, Coimbatore |
| **2. Coffee** | Karnataka | Western Ghats, Eastern Ghats. Nilgiris hills, Dindigul, Madurai, Theni and Salem |
| **3. Rubber** | Tamil Nadu, Kerala, Karnataka, Andaman and Nicobar Islands. | Kanyakumari |
| **4. Spices** | Kerala | Hills of Madurai region |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# உ. இந்தியாவில் மிகுதியான வளங்களைக் கொண்ட மாநிலங்கள்

| கனிமங்கள் | | | |
|---|---|---|---|
| **உலோகக் கனிமங்கள்** | | **அலோகக் கனிமங்கள்** | |
| **1. இரும்புத்தாது** மிகுதி:கர்நாடகா | அஸ்ஸாம், பீகார், சட்டீஸ்கர், ஜார்க்கண்ட், ஒடிசா, உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், கோவா, கேரளா, தமிழ்நாடு | **1. மைக்கா** மிகுதி:ஆந்திரப்பிரதேசம் | ராஜஸ்தான், ஒடிசா, ஜார்க்கண்ட் |
| **2. மாங்கனீசு** மிகுதி: ஒடிசா | கர்நாடகா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, கோவா, ஆந்திரப்பிரதேசம், ஜார்க்கண்ட், இராஜஸ்தான், குஜராத், தெலுங்கானா, மேற்கு வங்காளம் | **2. சுண்ணாம்புக்கல்** மிகுதி:ஆந்திரப்பிரதேசம் | தெலுங்கானா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத், மேகாலயா, சட்டீஸ்கர் |
| **3. தாமிரம்** மிகுதி:ராஜஸ்தான் | ஜார்க்கண்ட், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரேசம், குஜராத், ஹரியானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மேகாலயா, நாகலாந்து, ஒடிசா, சிக்கிம், தமிழ்நாடு, தெலுங்கானா, உத்தரகாண்ட், மேற்கு வங்காளம் | **3. ஜிப்சம்** மிகுதி: ராஜஸ்தான் | ஜம்மு-காஷ்மீர், தமிழ்நாடு, குஜராத், குஜராத், இமாச்சலப்பிரதேசம், கர்நாடகா, உத்தரகாண்ட், ஆந்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் |
| **4. பாக்சைட்** மிகுதி: ஒடிசா | குஜராத், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, சட்டீஸ்கர், தமிழ்நாடு | | |
| **ஆற்றல் வளங்கள்** | | | |
| **புதுப்பிக்க இயலா வளங்கள்** | | **புதுப்பிக்கத்தக்க வளங்கள்** | |
| **1. நிலக்கரி** மிகுதி:ஜார்க்கண்ட் | ஒடிசா, மேற்குவங்காளம், மத்தியப்பிரதேசம், அஸ்ஸாம், ஜம்மு-காஷ்மீர், சட்டீஸ்கர், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா | **1. நீர்மின்சக்தி** | அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், நாகலாந்து, திரிபுரா, மேற்கு தொடர்ச்சி மலைகள் |
| **2. பெட்ரோலியம் / கச்சாஎண்ணெய்** | மேற்கு கடற்கரை: மும்பை (அதிகம்), குஜராத் கடற்கரை, அஹமதாபாத் கிழக்கு கடற்கரை: அஸ்ஸாம், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள், மன்னார் வளைகுடா, பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் | **2. சூரிய ஆற்றல் / சக்தி** | ஆந்திரப்பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் |
| **3.இயற்கை எரிவாயு** மிகுதி: மும்பை | குஜராத், அஸ்ஸாம், தமிழ்நாடு, திரிபுரா, ராஜஸ்தான், அருணாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்கம் | **3. காற்று சக்தி** மிகுதி: தமிழ்நாடு | குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு |
| **மரபுசார் ஆற்றல் வளங்கள்** | | | |
| **1. அனல்மின்சக்தி** | அஸ்ஸாம், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், மிசோரம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு | **2. அணு சக்தி** | மும்பை, ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், கர்நாடகா, குஜராத் |
| **தொழிற்சாலைகள்** | | | |
| **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்** | | | |
| **1. பருத்தி நெசவாலைகள்** மிகுதி: மும்பை | கொல்கத்தா, மகாராஷ்டிரா, குஜராத், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு | **3. பட்டு நெசவாலைகள்** மிகுதி: கர்நாடகா | மேற்கு வங்காளம், ஜம்மு-காஷ்மீர், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், அஸ்ஸாம், தமிழ்நாடு |
| **2. சணல் ஆலைகள்** மிகுதி: மேற்கு வங்கம் | கொல்கத்தா, வங்காளம், ஆந்திரப்பிரதேசம், பீகார், உத்தரப்பிரதேசம், அஸ்ஸாம், சட்டீஸ்கர், ஒடிசா | **4. சர்க்கரை தொழிற்சாலை** மிகுதி: உத்தரப்பிரதேசம் | மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, பீகார், பஞ்சாப், குஜராத், ஹரியானா, மத்தியப்பிரதேசம் |
| **காடு வளம் சார்ந்த தொழிற்சாலைகள்** | | **கனிமம் சார்ந்த தொழிற்சாலைகள்** | |
| **காகிதத் தொழிற்சாலைகள்** மிகுதி: மேற்கு வங்கம் | மத்தியப்பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு | **இரும்பு எஃகு தொழிற்சாலைகள்** | ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், கர்நாடகா, சட்டீஸ்கர், ஒடிசா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 2. LARGE PRODUCING STATES WITH RESPECT TO RESOURCES

## MINERALS

| Metallic | | Non-Metallic | |
|---|---|---|---|
| **1. IRON ORE** **Maximum:** Karnataka | Assam, Bihar, Chhattisgarh, Jharkhand, Odisha, Uttar Pradesh, Andhra Pradesh, Goa, Kerala, Tamil Nadu | **1. MICA** **Maximum:** Andhra Pradesh | Rajasthan, Odisha, Jharkhand |
| **2. MANGANESE** **Maximum:** Odisha | Karnataka, Madhya Pradesh, Maharashtra, Goa, Andhra Pradesh, Jharkhand, Rajasthan, Gujarat, Telangana, West Bengal | **2. LIME STONE** **Maximum:** Andhra Pradesh | Telangana, Rajasthan, Madhya Pradesh, Tamil Nadu, Karnataka, Gujarat, Meghalaya, Chhattisgarh |
| **3. COPPER** **Maximum:** Rajasthan | Jharkhand, Madhya Pradesh, Andhra Pradesh, Gujarat, Haryana, Karnataka, Maharashtra, Meghalaya, Nagaland, Odisha, Sikkim, Tamil Nadu, Telangana, Uttarakhand, West Bengal | **3. GYPSUM** **Maximum:** Rajasthan | Jammu and Kashmir, Tamil Nadu, Gujarat, Himachal Pradesh, Karnataka, Uttarakhand, Andhra Pradesh, Madhya Pradesh |
| **4. BAUXITE** **Maximum:** Odisha | Gujarat, Jharkhand, Maharashtra, Chhattisgarh, Tamil Nadu | | |

## ENERGY RESOURCES

| Non-Renewable Energy | | Renewable/Non-Conventional resources | |
|---|---|---|---|
| **1. COAL** **Maximum:** Jharkhand | Odisha, West Bengal, Madhya Pradesh, Assam, Jammu and Kashmir, Chhattisgarh, West Bengal, Andhra Pradesh, Maharashtra | **1. HYDRO POWER** | Assam, Arunachal Pradesh, Manipur, Nagaland, Tripura, Western Ghats |
| **2. PETROLEUM (OR) CRUDE OIL** | <u>Western coast offshore</u>: Mumbai (Max), Gujarat coast, Ahmedabad <u>Eastern coast offshore</u>: Upper Assam, Andaman and Nicobar, Gulf of Mannar, Punjab, Haryana, Uttar Pradesh | **2. SOLAR ENERGY** | Andhra Pradesh, Gujarat, Rajasthan, Maharashtra, Madhya Pradesh |
| | | **3. WIND ENERGY** **Maximum:** Tamil Nadu | Gujarat, Maharashtra, Tamil Nadu |
| **3. NATURAL GAS** **Maximum:** Mumbai | Gujarat, Assam, Tamil Nadu, Tripura, Rajasthan, Arunachal Pradesh, Punjab, Jammu & Kashmir, West Bengal | **4. TIDAL & WAVE ENERGY** | Gulf of Cambay, Gulf of Kutch, Thiruvananthapuram |
| **Conventional Energy Sources** | | | |
| **1. THERMAL POWER** | Assam, Bihar, Jharkhand, Chhattisgarh, Mizoram, West Bengal, Tamil Nadu | **2. NUCLEAR POWER** | Mumbai, Rajasthan, Tamil Nadu, Uttar Pradesh, Karnataka, Gujarat |

## INDUSTRIES

| Agro based industries | | | |
|---|---|---|---|
| **1. COTTON TEXTILE INDUSTRY** **Maximum:** Mumbai | Kolkata, Maharashtra, Gujarat, West Bengal, Uttar Pradesh, Tamil Nadu | **3. SILK INDUSTRY** **Maximum:** Karnataka | West Bengal, Jammu Kashmir, Bihar, Jharkhand, Chhattisgarh, Uttar Pradesh, Punjab, Assam and Tamil Nadu |
| **2. JUTE TEXTILES** **Maximum:** West Bengal | Kolkata, Bangladesh, Andhra Pradesh, Bihar, Uttar Pradesh, Assam, Chhattisgarh, Odisha | **4. SUGAR INDUSTRY** **Maximum:** Uttar Pradesh | Maharashtra, Uttar Pradesh, Karnataka, Andhra Pradesh, Tamil Nadu, Bihar, Punjab, Gujarat, Haryana and Madhya Pradesh |
| **Forest based industries** | | **Mineral based industries** | |
| **PAPER INDUSTRY** **Maximum:** West Bengal | Madhya Pradesh, Odisha and Tamil Nadu | **IRON AND STEEL INDUSTRIES** | Jharkhand, West Bengal, Karnataka, Chhattisgarh, Odisha, Tamil Nadu, Andhra Pradesh |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## 3. Important Agricultural revolutions in India / இந்தியாவின் முக்கிய வேளாண்மை புரட்சிகள்

| Revolutions / புரட்சிகள் | Products / உற்பத்திகள் |
|---|---|
| Yellow Revolution / மஞ்சள் புரட்சி | Oil seed Production (Especially Mustard and Sunflower) எண்ணெய் வித்துக்கள் (குறிப்பாக கடுகு மற்றும் சூரிய காந்தி) |
| Blue Revolution / நீலப்புரட்சி | Fish Production / மீன்கள் உற்பத்தி |
| Brown Revolution / பழுப்புப் புரட்சி | Leather / Cocoa / Non-Conventional Products தோல், கோக்கோ, மரபுசாரா உற்பத்தி |
| Golden Fibre Revolution / தங்க நூலிழைப் புரட்சி | Jute Production / சணல் உற்பத்தி |
| Golden Revolution / பொன் புரட்சி | Fruits / Honey Production / Horticulture Development பழங்கள், தேன் மற்றும் தோட்டக்கலைப் பயிர் |
| Grey Revolution / சாம்பல் புரட்சி | Fertilizers / உரங்கள் |
| Pink Revolution / இளஞ்சிவப்புப் புரட்சி | Onion Production / Pharmaceuticals / Prawn Production வெங்காயம், மருந்து பொருட்கள், இறால் உற்பத்தி |
| Evergreen Revolution / பசுமைப் புரட்சி | Overall Production of Agriculture / அனைத்து வேளாண் உற்பத்தி |
| Silver Revolution / வெள்ளி புரட்சி | Egg Production / Poultry Production / முட்டை மற்றும் கோழிகள் |
| Silver Fibre Revolution / வெள்ளி இழைப்புரட்சி | Cotton / பருத்தி |
| Red Revolution / சிவப்புப் புரட்சி | Meat Production / Tomato Production இறைச்சி உற்பத்தி, தக்காளி உற்பத்தி |
| Round Revolution / வட்டப் புரட்சி | Potato / உருளைக்கிழங்கு |
| Green Revolution / பசுமைப் புரட்சி | Food Grains / உணவு தானியங்கள் |
| White Revolution / வெண்மைப் புரட்சி | Milk Production / பால் உற்பத்தி |

## 4. இந்திய இரயில்வே மண்டலங்கள் / Indian Railway zones

| S.No /வ.எண். | Railway Zones / இரயில்வே மண்டலங்கள் | Head Quarters / தலைமையிடம் |
|---|---|---|
| 1. | வடக்கு இரயில்வே / Northern Railway | புதுடெல்லி / New Delhi |
| 2. | வடமேற்கு இரயில்வே / North Western Railway | ஜெய்ப்பூர் / Jaipur |
| 3. | வட மத்திய இரயில்வே / North Central Railway | அலகாபாத் / Allahabad |
| 4. | வட கிழக்கு இரயில்வே / North Eastern Railway | கொரக்பூர் / Gorakhpur |
| 5. | வட கிழக்கு எல்லை இரயில்வே / North East Frontier Railway | கௌகாத்தி / Guwahati |
| 6. | கிழக்கு இரயில்வே / Eastern Railway | கொல்கத்தா / Kolkata |
| 7. | கிழக்கு கடற்கரை இரயில்வே/ East Coast Railway | புவனேஸ்வர் / Bhubaneswar |
| 8. | கிழக்கு மத்திய இரயில்வே / East Central Railway | ஹசிப்பூர் / Hajjpur |
| 9. | மேற்கு மத்திய இரயில்வே / West Central Railway | ஜபல்பூர் / Jabalpur |
| 10. | மத்திய இரயில்வே / Central Railway | மும்பை (சத்ரபதி சிவாஜி)/ Mumbai (Chathrapathi sivaji) |
| 11. | மேற்கு இரயில்வே / Western Railway | மும்பை (சர்ச்கேட்) / Mumbai(Church gate) |
| 12. | தெற்கு இரயில்வே / Southern Railway | சென்னை / Chennai |
| 13. | தென் மத்திய இரயில்வே / South Central Railway | செகந்தராபாத் / Secunderabad |
| 14. | தென் கிழக்கு இரயில்வே / South Eastern Railway | கொல்கத்தா / Kolkata |
| 15. | தென் மேற்கு இரயில்வே / South Western Railway | ஹூப்ளி / Hubli |
| 16. | தென் கிழக்கு மத்திய இரயில்வே / South East Central Railway | பிலாஸ்பூர் / Bilaspur |
| 17. | கொங்கன் இரயில்வே / Konkan Railway | நவி மும்பை / Navi Mumbai |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## 5. Multi purpose River valley Projects in Tamilnadu / தமிழ்நாட்டின் ஆற்றுப்பள்ளதாக்கு திட்டங்கள்

| Name of the Dam / அணையின் பெயர் | District / மாவட்டம் | River / ஆறு |
|---|---|---|
| 1. Mettur dam / மேட்டூர் அணை | Salem / சேலம் | Cauveri / காவிரி |
| 2. Bavani Sagar dam / பவானி சாகர் அணை | Erode / ஈரோடு | Bavani / பவானி |
| 3. Amaravathi dam / அமராவதி அணை | Tiruppur / திருப்பூர் | Amaravathi / அமராவதி |
| 4. Krishnagiri dam / கிருஷ்ணகிரி அணை | Krishangiri / கிருஷ்ணகிரி | Thenpennai / தென்பெண்ணை |
| 5. Sathanur dam / சாத்தனூர் அணை | Tiruvannamalai / திருவண்ணாமலை | Thenpennai / தென்பெண்ணை |
| 6. Mullai Periyar dam / முல்லைப்பெரியாறு அணை | Kerala State / கேரளா | Periyar / பெரியாறு |
| 7. Vaigai dam / வைகை அணை | Madurai / மதுரை | Vaigai / வைகை |
| 8. Manimuthar dam / மணிமுத்தாறு அணை | Thirunelveli/ திருநெல்வேலி | Thamirabarani / தாமிரபரணி |
| 9. Papanasam dam / பாபநாசம் அணை | Thirunelveli/ திருநெல்வேலி | Thamirabarani / தாமிரபரணி |
| 10. Parambikulam Aliyar Project / பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் | Palani / பழனி | Aliyar, Parambikulam /ஆழியாறு, பரம்பிக்குளம் |

### பாடப்புத்தகத்தில் புவியியல் பகுதியில் இடம்பெற்றுள்ள முக்கிய ஆண்டுகள்

1895 - Mullaiperiyar dam / முல்லைப் பெரியாறு அணை.

1897 - The first hydro-electric power station / இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம்

1919 - First Livestock Census in India / இந்தியாவின் முதல் கால்நடை கணக்கெடுப்பு

1940 - Nuclear power programme in India / இந்தியாவில் அணுமின் திட்டம்

1952 - The Indian Board for Wildlife (IBWL) / இந்திய வனவிலங்கு வாரியம்

1967 - The Vainu Bappu Observatory / வைணு பாப்பு வானவியல் தொலைநோக்கி மையம்

1972 - Wildlife (Protection) Act / வன விலங்கு பாதுகாப்புச் சட்டம்

1973 - Tiger Reserves / புலிகள் பாதுகாப்பு திட்டம்

1985 - The Tamil Nadu Rice Research Institute / தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம்.

1988 - National Forest Policy / தேசிய வனக்கொள்கை

1812 - The first paper mill of India was started / இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை தொடக்கம்

1995 - National Highways Authority of India established/ இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தொடக்கம்

1902 - First Rubber plantation established in Kerala / கேரளாவில் முதல் இரப்பர் தோட்டம் துவக்கம்

1992 - United Nations Convention on Biological Diversity / ஐக்கிய நாடுகளின் சபையின் உயிரியல் பன்மை

1995 - National Highways Authority of India established / இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

2015 - Indian Institute of Remote Sensing (IIRS) / இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்

2018 - National year of millets / தேசிய தினைப் பயிர்களின் ஆண்டு

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## CIVICS / குடிமையியல்

| I. RIGHT TO EQUALITY | II. RIGHT TO FREEDOM |
|---|---|
| Art. 14 - Equality before law.<br>Art. 15 - Prohibition of discrimination on grounds of religion, race, caste, sex or place of birth.<br>Art. 16 - Equality of opportunity in matters of public employment.<br>Art. 17 - Abolition of Untouchability.<br>Art. 18 - Abolition of titles except military and academic. | Art. 19 - Freedom of speech and expression, assembly, association, movement, residence and profession.<br>Art. 20 - Protection in respect of conviction for offences.<br>Art. 21 - Protection of life and personal liberty.<br>Art. 21A - Right to elementary education.<br>Art. 22 - Protection against arrest and detention in certain cases. |
| **III. RIGHT AGAINST EXPLOITATION**<br>Art. 23 - Prohibition of traffic in human beings and forced labour.<br>Art. 24 - Prohibition of employment of children in factories, etc., | **IV. RIGHT TO RELIGION**<br>Art. 25 - Freedom of conscience and free profession, practice and propagation of religion.<br>Art. 26 - Freedom to manage religious affairs.<br>Art. 27 - Freedom from payment of taxes for promotion of any religion.<br>Art. 28 - Freedom from attending religious instruction or worship in certain educational institutions. |
| **V. CULTURAL & EDUCATIONAL RIGHTS**<br>Art. 29 -Protection of language, script and culture of minorities.<br>Art. 30 - Right of minorities to establish and administer educational institutions. | **VI. RIGHT TO CONSTITUTIONAL REMEDIES**<br>Art. 32 - It allows individuals to seek redressal for the violation of their fundamental rights. |

| I. சமத்துவ உரிமை | II. சுதந்திர உரிமை |
|---|---|
| **பிரிவு 14** – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.<br>**பிரிவு 15** – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்தல்.<br>**பிரிவு 16** – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்<br>**பிரிவு 17** – தீண்டாமையை ஒழித்தல்.<br>**பிரிவு 18** – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத்தவிர மற்ற பட்டங்களை நீக்குதல். | **பிரிவு 19** – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.<br>**பிரிவு 20** – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.<br>**பிரிவு 21** – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.<br>**பிரிவு 21 A** – தொடக்கக்கல்வி பெறும் உரிமை.<br>**பிரிவு 22** – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை |
| **III. சுரண்டலுக்கெதிரான உரிமை**<br>**பிரிவு 23:** கட்டாய வேலை, கொத்தடிமை முறை, மனிதத்தன்மையற்ற வியாபாரத்தை தடுத்தல்<br>**பிரிவு 24:** தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல் | **IV. சமயச்சார்பு உரிமை**<br>**பிரிவு 25:** எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை<br>**பிரிவு 26:** சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை<br>**பிரிவு 27:** எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கு எதிரான சுதந்திரம்<br>**பிரிவு 28:** மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை |
| **V. கல்வி கலாச்சார உரிமை**<br>**பிரிவு 29:** சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சார பாதுகாப்பு<br>**பிரிவு 30:** சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை | **VI. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை**<br>**பிரிவு 32:** தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல் |



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# ECONOMICS / பொருளியல்

## 1. IMPORTANT FORMULAE

**GDP: Gross Domestic Product**

It is the total value of output of goods & services produced by factors of production within geographical boundaries of India

**GNP: Gross National Product**

GNP = C + I + G + (X–M) + NFIA

Where, C = Consumption I = Investment

G = Government Expenditure

X-M = Export – Import

NFIA = Net Factor Income from Abroad

**NNP: Net National Product**

NNP = GNP – Depreciation

**NDP: Net Domestic Product**

NDP = GDP – Depreciation

**PCI: Per Capita Income / output per person**

$$\text{Per capita Income} = \frac{\text{National Income}}{\text{Population of a country}}$$

**PI: Personal Income**

PI = NI corporate Income Taxes − Undistributed corporate profits − social security contribution + Transfer payment

**DI/DPI: Disposable Income**

DPI = PI − Direct Taxes (OR)

DI = Consumption Expenditures + Savings

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்)களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**

GNP = C + I + G + (X–M) + NFIA

C- நுகர்வோர் I – முதலீட்டாளர்

G = அரசு செலவுகள்

X-M = ஏற்றுமதி - இறக்குமதி

NFIA – வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்

**நிகர நாட்டு உற்பத்தி (NNP)**

நிகர நாட்டு உற்பத்தி=மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம்

**நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)**

நிகர உள்நாட்டு உற்பத்தி= மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

**தலா வருமானம் (PCI)**

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள்தொகை}}$$

**தனிப்பட்ட வருமானம் (PI)**

தனிப்பட்ட வருமானம் = நாட்டு வருமானத்தில் பெரு நிறுவனங்களின் வருமான வரி – பெரு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத வருவாய் - சமூக பாதுகாப்பு பங்களிப்பு + மாற்று வருவாய்

**செலவிடத்தகுதியான வருமானம் (DI)**

DPI = தனிப்பட்ட வருமானம் - நேர்முக வரி

DI = நுகர்வுச்செலவு + சேமிப்பு

## 2. IMPORTANT TAXES

**Direct Taxes:**

**Income Tax:** It is the most common and most important tax levied on an individual in India. It is charged directly based on the income of a person.

**Corporate tax:** This tax is levied on companies that exist as separate entities from their shareholders.

**Wealth tax:** It is charged on the benefits derived from property ownership. The same property will be taxed every year on its current market value.

**Indirect Taxes:**

**Stamp duty:** It is a tax that is paid on official documents like marriage registration, some contractual agreements, etc.,

**Entertainment tax:** It is a duty that is charged by the government on any source of the entertainment provided.

**An excise tax:** It is any duty on manufactured goods levied at the movement of manufacture.

**Goods and service tax:** It is defined as the tax levied when a consumer buys a good or service.

- ✓ State Goods and Service Tax (SGST)
- ✓ Central Goods and Service Tax (CGST)
- ✓ Integrated Goods and Service Tax (IGST)

**நேர்முக வரிகள்:**

**வருமான வரி:** வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிமுறையில் மிக முக்கியமான வரியாகும். இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

**நிறுவன வரி:** இவ்வரி பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.

**சொத்து வரி:** இவ்வரி தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

**மறைமுக வரிகள்:**

**முத்திரைத்தாள் வரி:** இவ்வரி அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

**பொழுதுபோக்கு வரி:** எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும்.

**சுங்கத்தீர்வை (அ) கலால் வரி:** இவ்வரி விற்பனையை விட உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்தி பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும்.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:** இவ்வரி நுகர்வோர் பண்டங்கள் அல்லது பணிகளை வாங்கும் போது விதிக்கப்படும் வரியாகும்.

- ✓ மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST)
- ✓ மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST)
- ✓ ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி(IGST)



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பாடப்புத்தகத்தில் குடிமையியல் பகுதியில் இடம்பெற்றுள்ள முக்கிய ஆண்டுகள்

1950 - The Indian Constitution / இந்திய அரசியலமைப்பு சட்டம்
1950 - The Supreme Court of India inauguration / இந்திய உச்சநீதிமன்றம் துவக்கம்
1954 - Panchsheel / பஞ்சசீலம்
1955 - The First language committee / முதலாவது மொழிக்குழு
1963 - The Official Language Act / அலுவலக மொழி சட்டம்
1971 - Indo – Soviet treaty / இந்திய சோவியத் ஒப்பந்தம்
1974 - Subterranean Nuclear Explosions Project / நிலத்தடி அணு வெடிப்புத் திட்டம்
1977 - Farakka accord / பராக்கா ஒப்பந்தம்
1992 - The Look East Policy / கிழக்கு நோக்கு கொள்கை
1998 - The second nuclear test at Pokhran / பொக்ரானில் நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை
2015 - BRICS Summit / பிரிக்ஸ் மாநாடு
2019 - New Andhra Pradesh High Court / ஆந்திர பிரதேசத்தில் புதிய உயர் நீதிமன்றம்

## பாடப்புத்தகத்தில் பொருளியல் பகுதியில் இடம்பெற்றுள்ள முக்கிய ஆண்டுகள்

1600 - The East India Company establishment / கிழக்கு இந்திய கம்பெனி நிறுவனம் தோற்றம்
1616 - Formation of East India company / டேனிஷ் கிழக்கு இந்திய நிறுவனம் தோற்றம்
1947 - General Agreement of Trade and Tariff(GATT) / காட் ஒப்பந்தம்
1949 - Tamil Nadu Industrial Investment Corporation Ltd / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
1965 - Tamil Nadu Industrial Development Corporation / தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம்.
1970 - Tamil Nadu Small industries Development Corporation / தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்
1971 - State Industries Promotion Corporation of Tamil Nadu / தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்
1974 - Foreign Exchange Regulation Act / அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச்சட்டம்
1990 - New Economic Policy / புதிய பொருளாதாரக் கொள்கை
2013 - National Food Security Act / தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்.
2016 - Enactment of the Benami Transactions Amendment Act / பினாமி பரிவர்த்தனைகள் திருத்தச் சட்டம்.
2016 - Standup India Scheme / ஸ்டாண்ட்அப் இந்தியா திட்டம்.
2016 - Startup India Scheme / ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம்.
2016 - The Real Estate Act / ரியல் எஸ்டேட் சட்டம்.
2017 - The goods and service tax / பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
2018 - The new agricultural policy / புதிய விவசாயக் கொள்கை

**சிறப்பாகச் செயல்பட்டால் வெற்றி உறுதி!!**
**எங்களது வெற்றிக்கு வழி படைப்புகளை பயன்படுத்தி**
**அரசுத்தேர்வில் 'நூற்றுக்கு நூறு' வென்றெடுக்க வாழ்த்துகிறோம்!**





Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com